04.09.2025 வா.சா.2 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண்.223 /2018) திருமதி.திவ்வியா.

2,4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை-

1) சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். நான் கோவில்பட்டியில் குடியிருந்து வருகிறேன் என்றால் ஆமாம். நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.ஏ.பி.எல்.படித்துள்ளேன். வேலை பார்க்கிறேனா எனறால இலலை. எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 2017 ல் நடைபெற்றது. வழக்கு சொத்து இராஜாபுதுக்குடியில் உள்ளது என்றால் சரிதான். 1ம்வாதி வசந்தா எனது தாயார் என்றால் சரிதான். எனது தாயாருக்கு 1987 ல் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண், அதன் விஸ்தீரணம் தெரியுமா என்றால் சர்வே எண் சரியாக தெரியும் ஆனால் விஸ்தீரணம் சரியாக தெரியாது. எனது தாயார் 1ம்வாதி வசந்தா அவர்களது அப்பா தான் 1ம்பிரதிவாதி கருப்பசாமி என்றால் சரிதான். 2,4 பிரதிவாதிகள் எனது தாயாருடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணம் 1ம்பிரதிவாதி பெரியகருப்பசாமிக்குகோட்டாட்சிரிடம் வந்த விசாரணை அறிவிப்பு என்றால் சரிதான். பெரிய கருப்பசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்தை 2,4 பிரதிவாதிகள் ஏமாற்றி எழுதிவாங்கிக்கொண்டார்கள் என்று கோட்டாட்சியரிடம் மனுக்கொடுத்திருந்தார்கள் என்றால் ஆமாம். கோட்டாட்சியர் 2,4 பிரதிவாதிகள் வாங்கிய ஆவணத்தை ரத்து செய்து இதுவரை போடவில்லை என்றால் சரிதான்.

2) எனது தாத்தா 2,4 பிரதிவாதிகளுக்கு எப்போது சொத்தை எழுதிக்கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனது தாத்தா எழுதிக் கொடுத்தது முதல் 2,4 பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது தாயார் எனது தாத்தாமீது வழக்குதொடர்ந்திருந்தார் என்றால் சரிதான். எனது தாத்தாவுக்கும், தாயாருக்கும் பிரச்சனை ஏற்பட்டு வழக்குதாக்கல் செய்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது தாயார், எனது தாத்தாவின் மீது வழக்கு தாக்கல் செய்த பின்னர் எனது தாத்தாவை எனது தாயாரும், சித்தியும் பராமரித்து வந்தாக சொல்லுவது தவறு என்றால் சரியல்ல. எனது அம்மாவும்,சித்தியும் தான் பராமரித்து வந்தார்கள் எழுதிக்கொடுத்து விட்டார்கள் ஆனால் அவர்கள் பார்க்கவில்லை. எனது தாத்தா எப்போது இறந்தார் என்றால் பிப்ரவரி 2024 ல் இறந்து போனார். வா.சா.ஆ.4 ல் எனது தாத்தா 09.05.2022 ல் காலை 10.30 மணிஅளவில் கோவில்பட்டி கோட்டாட்சியர்

விசாரணைக்கு நேரில் வரவேண்டுமென்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த விசாரணையின் அடிப்படையில் எனது தாத்தா ஆஜரானார் என்றால் ஆஜராகவில்லை. கோட்டாட்சியரின் விசாரணையில் எனது தாத்தா ஆஜராகவில்லை என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) எனது தாத்தா படுத்தபடுக்கையாக பக்கவாத நோய் ஏற்பட்டு இருந்தார் என்பதை காட்டுவதற்கும் ஆவணம் எதுவும் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். 2,4 பிரதிவாதிகள் 1ம்பிரதிவாதி பெரியகருப்பசாமியை பராமரிக்கவில்லை என்பது தவறு என்றும வாதிகள் தான் பராமரித்து வந்ததாகசொல்லுவது பொய் என்றால் சரியல்ல. எனது தாத்தாவுக்கு பக்கவாத நோய் ஏற்பட்டு நடக்க இயலாமல் இருந்தாக சொல்லுவது உண்மையல்ல என்றால்ச ரியல்ல. வழக்குசொத்தில் எனதுதாயாருக்கு 1/6 பங்கு என்பது உண்மையல்ல என்றாலும் எனது தாயாருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது தாத்தா வழக்கு தாக்கல் செய்யும் போது தாக்கல்செய்த எதிர்வழக்குரை என்றால் சரிதான். வழக்கு போடும் போது எனது தாத்தா நல்ல நிலையில் தான் இருந்தார். அந்த எதிர்வழக்குரை பாரா 10ல் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று வாசித்து காண்பிக்கும் படி கேட்டபோது ' பிராது தபசில் கண்ட சொத்துக்களில் வாதிகளுக்கு எக்காலத்திலும் உரிமையும், அனுபவம் கிடையாது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சொல்லப்பட்டுள்ளது. எதிர்வழக்கு 04.09.2019 எனது தாத்தா தாக்கல் செய்துள்ளார். கோட்டாட்சியரிடம் மனுக்கொடுத்தது 2022ல் 1ம்பிரதிவாதியுடன் எனது தாயாரும் சேர்ந்து தான் மனுக்கொடுத்தார் என்றால் சரிதான். அந்த மனுவானது எனதுதாயாரின் துாண்டுதலின் பேரில் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

<u>3ம்பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -</u> வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
04.09.2025.